உண்மை நகல் : -

220

76

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

சொத்துவரி விதிப்பு – கட்டிட விதிகளுக்கு முரணாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பதற்கு தெளிவுரை வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி.) துறை**

**அரசாணை (நிலை) எண். 161** **நாள்: 14.11.2000**

படிக்கப்பட்டவை: நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித ந.க.எண். 64580/99/ஆர்1, நாள்: 22.9.99

.........

**ஆணை:**

1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் அடிப்படையில் கட்டிட விதிகளுக்கு முரணாகக் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பதற்கு வகுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை மலைப்பிரதேசங்களில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கும் பின்பற்றுவது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையாளர் அரசிற்கு அனுப்பியிருந்த பரிந்துரைகள் அரசால் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டது.

2. நடைமுறையில் உள்ள சட்டக்கூறுகளின்படி நகராட்சி நிர்வாக ஆணையரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு உள்ளாட்சித் துறையின் 2.8.1948–ஆம் நாள் அரசாணை (நிலை) எண். 381–ல் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளுக்கிணங்க 1920–ஆம் ஆண்டைய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 82–ன் கீழ் மலைப்பிரதேசங்கள் உட்பட நகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் அனைத்து கட்டிடங்களுக்கும் அவற்றின் வேறு கட்டிட விதிகள் பாதிப்புகளைக் கருத்தில் கொள்ளாமல் கீழ்க்கண்ட இரண்டு நிபந்தனைகளை குறிப்பிட்டு சொத்து வரிவிதிக்கப்படலாம் என அரசு இவண் தெளிவுரை வழங்குகிறது.

(1) கட்டிட விதிகளுக்கு முரணாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது குறித்து எடுக்கப்படும் நடவடிக்கையின் முடிவைப் பொருத்து கட்டிடத்தில் மாறுதல் செய்யப்படும் அல்லது இடிக்கப்படும் நேர்வுகளில் அத்தகைய நடவடிக்கைக்குப் பின்னர் தேவைப்படின் வரி விதிப்பை குறைக்கவோ அல்லது வரிவிதிப்பை ரத்து செய்யவோ நடவடிக்கை எடுக்கப்படும்.

(2) இந்த வரிவிதிப்பு கட்டிட விதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் கட்டுப்படுத்தாது.

(3) இதனை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அறிவுறுத்துமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஒம் / –
அரசு செயலாளர் (பொ)

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.

// உண்மை நகல் //

கண்காணிப்பாளர்.